# சித்தர் பாடல்களில் நிலையாமைச் சிந்தனைகள்

*முனைவர் பா. சீனிவாசன்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர்
கிருஸ்துராஜ் கல்லூரி, பஞ்சப்பூர்
திருச்சிரப்பள்ளி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5057

## அறிமுகம்

நிலையாமையை நிலையானதாக உடையது இவ்வுலகம். உலக உயிர்கள் அனைத்தும் ஒரு நாள் மறைந்து போக வேண்டும் என்பது இயற்கையின் நியதி. இக்கருத்தினை

**பாங்கருஞ் சிறப்பி பல்லாற்றானு**
**நில்லா வுலகம் புல்லிய நெறித்தே1**

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இதற்கு நச்சினார்க்கினியர் உயிரும் உடம்பும் செல்வமும் இளமையும் நிலைபேறில்லாதது என்று கூறும் கருத்து உற்றுநோக்கத்தக்கது. சங்க இலக்கிய மான மணிமேகலையும் இளமை செல்வம் நிலையில்லாதது எனக் கூறுவதனை காணலாம்.

**இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
**வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா2**

இவ்வாறு பல இலக்கியங்கள் நிலையாமை பற்றி கூறினாலும் மனம், புத்தி, சித்தம்,அகங்காரம் என்ற நான்கனுள் சித்தம் என்னும் அறிவினைக் கொண்டு வாழும் நிலை அறிந்தவர்கள், மரணமில்லா பெருவாழ்வு வாழ்பவர்கள் சித்தர்கள். அதனால் அவர்கள் தாம் எழுதிய பாடல் களில் சமுதாய ஏற்றத்தாழ்வுகள், சாதி சமய வேறுபாடுகள் போன்றவற்றினை கடுமையாக சாடியிருந்தாலும் இவ்வுலகம் நிலையில்லாதது என்பதை அறிந்து அதனை உலக மக்களுக்கு உணர்த்தும் வகையில் தம் பாடல்களில் எடுத்துரைத்து ள்ளனர். அப்பாடல்களில் அவர்கள் கூறிய கருத்துக்களை ஆராய்ந்து உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## உயிர் நிலையாமை

உயிர் என்பது ஏதேனும் ஒரு உடலுக்குள் அடைக்கலமாகி அவ்வூடலினை இயக்குகின்றது. அதன் காலம் முடிவடைந்தவுடன் வெளிப்பட்டு சென்று விடுகின்றது.

இதனால் தான் சித்தர்கள் உடலினை வெறும் காற்று அடைத்த பை எனக் கூறினர். அதனால் தான் அவ்உயிர்காற்று உடலில் இருக்கும் வரை தான் மதிப்பு என்றனர். அதனை உணர்ந்து

அவ்வுயிர் இருக்கும் பொழுதே நல்ல செயல்களை

செய்து மண்ணில் வாழ்தல் வேண்டும் என அறிவுறுத்தினர்.இந்த எண்ணம் இல்லாமல் கால நேரத்தினை வீண் செய்து கொண்டிருப்பதோடு உடலினை விட்டு உயிர் சென்றால் அதனை திரும்ப செலுத்துதல் என்பது இயலாது என்பதனையும் அறியா வண்ணம் வாழ்கின்றனர் என்பதை மரக்கிளையில் உள்ள இலைகள் உதிர்ந்தால் துளிர்ப்பதை போல் திரும்ப பெற இயலாதது உயிர் என்று சித்தர்களில் முதன்மையவரான திருமூலர் தழைக்கின்ற செந்தளிர் தண்மலர்க் கொம்பில் இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்.[3] எனக் கூறுவதன் வாயிலாக அறிய முடிகின்றது. கறந்த பால் எவ்வாறு திரும்ப முலை புகாதோ அதனைப் போன்று உயிரினை அதே உடலில் திரும்ப செலுத்த இயலாது என்று

**கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணை மோர்புகா**
**உடைந்த போன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புக**
**இறந்தவர் பிழைப்பதில்லை இல்லை இல்லை இல்லையே4**

மேற்காண் பாடல் வழி சிவவாக்கியார் உணர்த்துகின்றார். இவ்உடலோடு உயிர் இருக்கும் போது வாய்க்கு சுவையான பண்டங்களையெல்லாம் தேடிச் சென்று உண்டு மகிழ்கின்றோமே நாம் மண்ணுக்கு இரையாக போவது அறியாமல் என வேதனையோடு எவ்வுடலிலும் நிலைத்து நிற்காது என்பது தான் உயிரின் தன்மையாக பாம்பாட்டிச் சித்தர்

**முக்கனியுஞ் சர்க்கரையும் மோதகங்களும்**
**முதிர்சுவைப் பண்டங்களும் முந்தி உண்டவாய்**
**மிக்க உயிர் போனபின்பு மண்ணை விழுங்**
**மெய்யாகக் கண்டோம் என்று ஆடுபாம்பே [5]**

என எடுத்துரைக்கின்றார். அழுகணிச் சித்தரோ உப்பிட்ட பிண்டம் போன்றது உடல். அவ்வுப்பு எவ்வாறு அப்பண்டத்தினை காக்கின்றதோ அது போல தான் உயிர் நம் உடலைக் காக்கின்றது. உப்பு இல்லாத பண்டம் எவ்வாறு வீணாகுமோ அதனைப் போன்று உயிர் இல்லாத உடலும் வீணாகும் என்பதனை

**ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி**
**மாற்றிப் பிறக்க மருந்தெனக்கு கிட்டுதில்லை**
**மாற்றிப் பிறக்க மருந்தெனக்கு கிட்டுமென்றால்[6]**

என இவ்வுலகினை உணரச் செய்கின்றார்.

## உடல் நிலையாமை

உடல் என்பது மனித ஆசைகளின் உறைவிடம் எனலாம். அதனால் தான் மனிதன் இலக்கினை பற்றி சிந்திக்காமல் வெறும் கனவு வாழ்க்கையினை இவ்வுடல் அழியும் என்பதனையும், உயிர் காற்று உடலை வீட்டு நீங்கினால் உடல் இயக்கம் நின்று அழுக ஆரம்பிக்கும் என்பதனையும் உணராமல் அறியாமையால் அர்த்தமற்ற செயல்களை செய்து வாழ்வினை வீணடிக்கின்றான். காற்று உள்ள போதே தூற்றிக்கொள் என்பது போல் உடல் நலமாக இருக்கும் பொழுதே நற்செயல்களை செய்தல் நலம் பயக்கும் என்பது சான்றோர்கள் கருத்தாக விளங்குகின்றது. மரணமில்லா பெருவாழ்வு பற்றி அறிந்த சித்தர்கள் இச்சிந்தனைகள் பற்றியெல்லலாம் அறிந்து அதன் வழி நடந்து மற்றவர்களுக்கும் வழிகாட்டினர். அதனால் தான் கடுவெளி சித்தர் நீர்மேல் தோன்றும் குமில் போல் மறைந்துவிடக் கூடியது உடல் எனக்

**நீர்மேற் குமிழியிக் காயம் இது**
**நில்லாது போய்விடும் நீயறிமாயம்[7]**

கூறுகின்ற இக்கருத்தானது சிந்திக்க கூடியதாக விளங்குகின்றது. மண்கலம் உடைந்தாலும் பயன் வெண்கலம் உடைந்தாலும் பயன் ஆனால் சல்லி காசுக்கும் உதவாத நாற்றம் எடுக்கும் உடலினை பேணிக்க அதிக நேரம் செலவிடுவதால் என்ன பயன் என்பதனை

**மண்கலம் கவிழ்ந்தபோது வைத்துவைத்து அடுக்குவார்**
**வெண்கலம் கவிழ்ந்தபோது வேணமென்று பேணவார்**

**நண்கலம் கவிழ்ந்தபோது நாறுமென்று போடுவார்[8]**

இவ்வரிகள் வாயிலாக சிவவாக்கியார் வினா எழுப்புகின்றார். இக்கருத்துக்களுக்கெல்லாம் வலிமையூட்டும் விதமாக இடுகாட்டில் எரியக் கூடிய உடலில் தான் எத்தனை பேராசைகள் வஞ்சம் இவையெல்லாம் வாழ்நாளை நீடிக்குமா என

**பஞ்சணையும் பூவணையும் பாயலும்வெறும்**
**பாழ்சுடு காடதிலே பயன் பெறுமோ[9]**

பாம்பாட்டி சித்தர் வினவுவதினை உற்றுநோக்கலாம். இச்சித்தரே நாய் நரி போன்ற விலங்குகளுக்கே இறுதியாக இவ்உடல் இரையாகும் என

**நாயுநரி யும்பெரிய பேயுங் கழுகும்**
**நமதென்றே தின்னுமென் றாடாய் பாம்பே.[10]**

இவ்வரிகளில் விளக்குவதனை காண முடிகின்றது.

### இளமை நிலையாமை

இளமை பருவம் அனைவராலும் விரும்பக் கூடியது. எதையும் யோசிக்காமல் துணிச்சலாக

**செயல்களை நிறைவேற்றக் கூடியது. அதனால் தான் சான்றோர்கள் இளமையில் கல் இளமையில் புகழ் என்பதனை போன்று அவ்இளமை இருக்கும் போழுதே செய்ய வேண்டிய**

நற்செயல்களை செய்து முடிதல் வேண்டும் என்றனர். இயற்கை அழகே அழகு என்ற உண்மையை உணர வேண்டும் என்பதோடு இவ்இளமை நிலையில்லாதது என்பதையும் உணர்ந்து தான் திருமூலர் கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே மறைவது போன்று இளமை மறைந்து போகும் என்பதனை

**கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே**
**விழக்கெண்டுந் தேறார் விழியிலா மாந்தர்**
**விழக்கண்டுந் தேறார் வியனுலகோரே[11]**

எனக் கூறி அறிவுரைபகர்கின்றார். மக்கள் கண்களில் குழி விழுந்து நரைஎய்தி வயது முதிர்ந்து உடல் தளரும் இவ்வாழ்க்கையினை பற்றி அறியாமல் உள்ளது குறித்து

**வளமையும்மாறி இளமையும் மாறி**
**வன்பல் விழுந்துஇரு கண்கள் இரண்டு[12]**

என பட்டினத்தார் புலம்புவதனை காண முடிகின்றது. இளமையை இழந்தால்திரும்ப பெற இயலாது என்ற எண்ணம் இல்லாமல் மனம் போகின்ற வழியில் சென்று பின் துன்பத்தில் சிக்கிக்கொள்கின்றனரே என குதம்பை சித்தர்

**பிறக்கும்போது உள்ள பெருமையைப் போலவே**
**இறக்கும் போது எய்துவிடும் குதம்பாய்[13]**

மேற்காண் பாடலில் வேதனையடைவதைக் காணலாம்.

### செல்வம் நிலையாமை

பொருள் செல்வத்தை விட அருள் செல்வமே சிறந்ததாகும். அதனை உணராமல் செல்வத்தை சேர்க்க ஓடி ஓடி அலைந்து வாழ்நாளை வீணாக்கி பண்பினையும் இழக்கின்றனர். அதனால் ஏதேனும் பயன் உண்டா என்றால் இல்லை நம் மறைவிற்கு பின் தான் எடுத்து செல்ல இயலுமா என்றால் அதுவும் இல்லை இவற்றையெல்லாம் உணர்ந்து செயல்பட வேண்டும். இறுதியில் மண் கூட செ ாந்தமாகாது என்பதை உணர வேண்டும் என்பது சித்தர்களின் கருத்தாக அமைகின்றது. நமன் நம்மை அழைக்கும் போது நாம் சேர்த்து வைத்த செல்வங்களினால் ஏதேனும் பயன் உண்டா என

**தேடிய செம்பொன்னும் செத்தபோது உன்னோடு**
**நாடி வருவதுண்டோ**
**போம்போது தேடும் பொருளில் அணுவேணும்**
**சாம்போது தான் வருமோ[14]**

இவற்றில் குதம்பைச் சித்தர் கூறுவது உற்றுநோக்கதக்கது. இக்கருத்தினை அடியொற்றி சேர்த்த செல்வத்தினால் என்ன பயன் என்று பாம்பாட்டி சித்தர்

**மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப்பவர்**
**மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ[15]**

என வினா எழுப்புவதினைக் காணலாம். பொருள் மீது ஆசை கொண்டு ஆடம்பர வாழ்க்கையினை வாழ்ந்து வருகின்றீர்கள்

அது பொய்யானது என்பதை உணருங்கள் என்பதோடு வாழ்வில் நல்ல செயல்களை செய்து பயனை அடையுங்கள் என

**நீளவீடு கட்டுறீர் நெடுங்கதவு சாத்துறீர்**
**வாழவேணும் என்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே**
**காலன் ஓலை வந்தபோது கையகன்று நிற்பீரே[16]**

இதன் வழி சிவவாக்கியார் கருத்து ரைக்கின்றார்.

### உறவு நிலையில்லாமை

மனிதன் தன் வாழ்வில் தாய் தந்தை மனைவி மக்கள் உறவினர் எனப் பலர் அமைகின்றனர். அவர்கள் மீது நாம் வைக்கும் அன்போ அல்லது அவர்கள் நம் மீது வைக்கும் அன்போ எதுவாயினும் அவை யாவும் மாயையே என்பதை உணர வேண்டும் என்பது சித்தர்கள் வாக்கு. வீடு வரை உறவு வீதி வரை மனைவி காடு வரை பிள்ளை கடைசிவரை யாரோ என்ற கண்ணதாசன் அவர்களின் கருத்தும் இங்கு நினைவு கூறத்தக்கது. இக்கருத்திற்கு வித்திட்டது போல மனைவி மக்கள் சுற்றம் சேர்த்த செல்வம் எதுவுமே நிலையானது அன்று

**மாடும் மனைகளும் மக்களும் சுற்றமும் வான்பொருளும்**
**வீடும் மணிகளும் வெண்பொன்னும் செம்பொன்னும்**
**வெண்கலமும்தேடும் பலபண்டம் நில்லா சிவகதி சேர்மின்களே.[17]**

என இடைக்காட்டு சித்தர் உரைப்பதனை காணலாம்.பாம்பாட்டிச் சித்தர் கூறிய நாம் செய்த தான தர்மங்களே கூட வரும்

**மக்கள்பெண்டிர் சுற்றமரு மக்கள் மற்றவர்**
**மாளும்போது கூடவவர் மாள்வ தில்லையே[18]**

என்ற கருத்து சிந்திக்க கூடியதாக விளங்குகின்றது.

### நிறைவுரை

சித்தர்கள் நிலையாமை சிந்தனைகள் பற்றி நன்கு அறிந்திருந்தனர் என்பதனை மக்கள் வாழும் வாழ்க்கை வெறும் கானல் நீர் போன்றது எனக் கூறுவதன் வாயிலாக காணமுடிகின்றது. எனவே அதனை அறிந்து வாழும் காலத்திலேயே நற்செயல்களை செய்து வாழ்வதோடு நம்முடன் பொன்னோ, பொருளோ, உறவோ ஏதும் துணைக்கு வராது என்பதைனை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றனர். இக்கருத்தினை அறிந்து ஆடம்பர வாழ்வினை விட்டொளித்து நிலையான வாழ்கையினை அடைய அறிவுறுத்துகின்றனர்.

### சான்றென் விளக்கம்

1. தொல். பொருள். நூற் - 78
2. மணிமேகலை சிறைசெய்காதை -135.36
3. திருமூலர் - 229
4. சிவவாக்கியார் -47
5. பாம்பாட்டிச் சித்தர்-.46
6. அழுகணிச் சித்தர்-8
7. கடுவெளி சித்தர்-4
8. சிவவாக்கியார் -80
9. பாம்பாட்டி சித்தர்-45
10. பாம்பாட்டி சித்தர்-63
11. திருமூலர்-221
12. பட்டினத்தார் உடற்கூற்று வண்ணம்-12
13. குதம்பைச் சித்தர்-82
14. குதம்பைச் சித்தர்-102
15. பாம்பாட்டி சித்தர்-44
16. சிவவாக்கியார்-25
17. இடைக்காட்டு சித்தர்-23
18. பாம்பாட்டிச் சித்தர்-48

### துணை நின்ற நூல்கள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. 2001
2. ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ), மணிமேகலை, உமா பதிப்பகம், சென்னை 2007.
3. சித்தர் பாடல்கள் மூலமும் உரையும் தமிழ்ப்பிரியன் கற்பகம் புத்தகாலயம், சென்னை. 2019